இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 22.01.2026

# ஓடுநர் !

அவர் பார்க்க வேண்டியது இரண்டே வேலைகள். ஆண்டின் தொடக்கத்தில் அரசின் உரையை, சட்ட மன்றத்துக்கு வந்து வாசிப்பது ஒன்று. அரசின் சட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது என்பது இரண்டு. இந்த இரண்டையும் செய்யாதவர், செய்ய மனமில்லாதவர் ஆளுநராக ஏன் இருக்க வேண்டும்? இருந்து, தமிழ்நாட்டு மக்களின் கழுத்தை ஏன் அறுக்க வேண்டும்?

**சட்டமன்றம் ஓராண்டில் கூடும் முதலாவது கூட்டத் தொடரின் முதலாவது நாளில் ஆளுநர்கள் உரையாற்ற வேண்டும் என்பது பிரிட்டிஷ் ஆட்சி காலத்து சடங்கு. அது இன்றும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. அரசின் கொள்கை அறிக்கையை, அரசு தயாரித்துத் தரும். அதனை ஆளுநரானவர், அவையில் வாசிக்க வேண்டும். அவ்வளவுதான். ஆனால் அதனை ஏதோ பெரிய மரியாதையாக நினைத்துக் கொண்டு அழிச்சாட்டியம் செய்து வருகிறார் ஆர்.என்.ரவி.**

2022 ஆம் ஆண்டு மட்டும் அரசின் உரையை முழுமையாக ஆர்.என்.ரவி வாசித்தார். 2023 ஆம் ஆண்டு உரையில் சுயமரியாதை, பெரியார், அம்பேத்கர், கலைஞர், மகளிர் முன்னேற்றம், மதச்சார்பின்மை ஆகிய சொற்களை அவர் வாசிக்கவில்லை. மாறாக சில சொற்களைச் சேர்த்து வாசித்தார். ‘அரசு கொடுத்த உரையில் இருப்பதுதான் அவைக் குறிப்பில் ஏறும்’ என்ற தீர்மானத்தை முதலமைச்சர் கொண்டு வந்து நிறைவேற்றியதும், தேசிய கீதம் ஒலிக்கும் போதே அதற்கு மரியாதை செலுத்தாமல் வெளியேறினார் ரவி.

**2024 ஆம் ஆண்டு அவைக்கு வந்தார். அவரது உரையை அவர் வாசிக்கவில்லை. தமிழ் உரையை அவைத்தலைவர் அப்பாவு வாசித்தார். ‘தொடக்கத்தில் தேசிய கீதம் பாட வேண்டும்’ என்று புதுக்கரடி விட்டார் ரவி. இதே காரணத்தைத்தான் 2025 ஆம் ஆண்டும் சொன்னார். உரையை வாசிக்காமல் அவையை விட்டு வெளியேறினார். இப்போதும் நேற்றைய தினம் உரையை வாசிக்காமல் அவையை விட்டு வெளியேறி இருக்கிறார்.**

அவையின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதும், இறுதியாக தேசிய கீதம் பாடுவதும்தான் தமிழ்நாட்டு மரபு. அதை விடுத்து, எடுத்தவுடன் தேசிய கீதம் பாட வேண்டும் என்பது ரவியின் முரண்டு ஆகும். ரவி எத்தனை தடவை சொன்னாலும் இந்த மரபு மாறாது. மாற்ற முடியாது. மாற்ற மாட்டார்கள் என்பதை அவரும் அறிவார். அப்படி இருக்கும் போது, கிண்டியிலேயே அவர் இருக்க வேண்டியது தானே? எதற்காக அவர் கோட்டை வரைக்கும் வந்து பெட்ரோலை வீணடிக்க வேண்டும்? மீடியாக்களுக்கு பிரேக்கிங் கொடுக்கும் மேனியாவாக இது இருக்கலாம்?

**அறிக்கையை அவரே தயாரித்து வருகிறார். அவ்வளவும் அபத்தம். தமிழ்நாட்டைக் கொச்சைப்படுத்தும் அறிக்கை. ரத்தவோட்டம் முழுக்கவே தமிழ்நாட்டுக்கு எதிரான கெட்ட ரத்தம் ஓடுபவரால்தான் அப்படி ஒரு அறிக்கையை வெளியிட முடியும். ‘தமிழ்நாடு முன்னேறுகிறதே’ என்ற வயிற்றெரிச்சலில் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளும் சிலரால் சுற்றி வளைக்கப்பட்டு இருக்கிறார் ஆர்.என்.ரவி என்பது அவர் வெளியிட்ட அறிக்கையில் இருந்தே தெரிகிறது.**

தமிழ்நாட்டு மக்கள் வரிப்பணத்தில் ஊதியம் வாங்கி, தினந்தோறும் ஊரைச் சுற்றிக் கொண்டு, யாரோ போட்டுக் கொடுத்த மேடையில் போய் அமர்ந்து கொண்டு, தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு விழுமியங்களையும் அசிங்கப்படுத்துவதே தனது வேலையாக வைத்துக் கொண்டு இருக்கிறார் ஆர்.என்.ரவி.

**தமிழ்நாட்டின் மக்களுக்குத் தேவையான சட்டங்களுக்கு எல்லாம் கையெழுத்துப் போடாமல் ஊறுகாய் பானையில் போட்டு ஊற வைத்து வருகிறவர் இவர் என்பதை நாடும் நாட்டு மக்களும் அறிவார்கள். ஆன்லைன் ரம்மியைத் தடை செய்யும் சட்டத்தையே நிறுத்தி வைத்தவர் என்பதும், ஆன்லைன் ரம்மி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களை தனது மாளிகைக்கு அவர் வரவழைத்துப் பார்த்தார் என்பதும் நாட்டு மக்கள் அறிந்தது ஆகும். இவரது செயல்பாடுகள் அரசியல் சட்டத்துக்கு முரணானது என்று நாம் மட்டும் சொல்லவில்லை, உச்சநீதிமன்றமே சொல்லி இருக்கிறது.**

**எத்தனை தடவை உச்சநீதிமன்ற நீதிபதிகளால் தலையில் ஓங்கிக் கொட்டப்பட்டுள்ளார் ரவி என்பது அவருக்குத் தெரியாது. ஒவ்வொரு முறையும் அவரை நாக்கை பிடுங்குவதைப் போல உச்சநீதிமன்றம் கேள்விகள் கேட்கிறது. ஆனாலும் அது அவருக்கு உறைக்கவில்லை. உணரவில்லை. தன்னைத் திருத்திக்கொள்ள முன் வரவில்லை. அவர் நிறுத்தி வைத்த சட்டங்களை விடுவித்தது உச்சநீதிமன்றம். அதன் பிறகும் எப்படி அவரால் கிண்டியில் வாழ முடிகிறது என்று தெரியவில்லை.**

தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறி வருகிறது, பொருளாதார வளர்ச்சியையும், தொழில் முதலீடுகளையும், கல்வி வளர்ச்சியையும் சமூக வளர்ச்சியையும் அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்து கொண்டு இருக்கிறார். உள்ளுக்குள் உட்கார்ந்து ஓட்டையைப் போட்டுக் கொண்டு இருக்கிறார். அவதூறுகளைப் பரப்பி வருகிறார். முன்பாவது அவரது பதவிக்கு மரியாதை தரப்பட்டு வந்தது. இப்போது அதனையும் இழந்து நிற்கிறார்.

**சட்டமன்றத்தை விட்டு ஓடும் இந்த ஓடுநர், தமிழ்நாட்டை விட்டு ஓடும் நாள் எந்நாளோ?**

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் கழகத்தில் இணைந்தார்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (21.1.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முன்னாள் அமைச்சர் இரா. வைத்திலிங்கம் அவர்கள் தன்னை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில்பாலாஜி, துரை சந்திரசேகர், பூண்டி கலைவாணன், என். அசோக் குமார், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்! ... முதல் பக்கத் தொடர்ச்சி

சட்டப்பேரவைத் தேர்தலைத் திறம்பட எதிர்கொள்ளும் வகையில், தமிழ்நாட்டின் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ கூட்டங்களை நடத்தி வெற்றிக்கான வியூகத்தை வகுத்திடுமாறு கழகத் தலைவர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் கழக உடன்பிறப்புகளால் வெற்றிக்கான வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2), 100 வாக்காளர்களுக்கு ஒருவர் என நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (BLC) மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) ஆகியோரைத் தேர்தல் பணிக்கு முழுமையாகத் தயார் செய்யும் வகையில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி”- வாக்குச்சாவடிக்குழுவினருக்கான பயிற்சி மாநாடுகளை நான்கு மண்டலங்களில் நடத்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

> “பிப்ரவரி–11 அன்று சென்னை மற்றும் விழுப்புரம் மண்டலங்களுக்கான மாநாட்டை தாம்பரம் – படப்பையிலும், பிப்ரவரி–14 அன்று வடக்கு மண்டலம் மாநாட்டை திருப்பத்தூரிலும், பிப்ரவரி–21 அன்று தெற்கு மண்டலம் மாநாட்டை மதுரையிலும், பிப்ரவரி–27 அன்று மேற்கு மண்டலத்திற்கான மாநாட்டை கோவையிலும் நடத்திட இம் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.

அதன்படி பிப்ரவரி-11 அன்று சென்னை மற்றும் விழுப்புரம் மண்டலங்களுக்கான மாநாட்டை தாம்பரம் - படப்பையிலும், பிப்ரவரி-14 அன்று வடக்கு மண்டலம் மாநாட்டை திருப்பத்தூரிலும், பிப்ரவரி-21 அன்று தெற்கு மண்டலம் மாநாட்டை மதுரையிலும், பிப்ரவரி-27 அன்று மேற்கு மண்டலத்திற்கான மாநாட்டை கோவையிலும் நடத்திட இம்மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 4**

**‘ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்’ – கழக மாநில மாநாடு**

சட்டப்பேரவைத் தேர்தலில் கழகத்தின் வெற்றியைப் பறைசாற்றும் வகையில் மார்ச்-8 அன்று தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் 10 இலட்சம் கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்ளும் ‘ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்’ மாபெரும் கழக மாநில மாநாட்டை நடத்துவதென இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு - மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில்

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் கழகத்தில் இணைந்தார் !

### சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்!

**சென்னை, ஜன.22-**

**தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (ஜன.21) காலை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் தி.மு.க.வில் இணைந்தார்.**

முன்னதாக, ஒரத்தநாடு தொகுதி எம்.எல்.ஏ.,வாக இருந்த அவர் தனது எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்தார். சட்டப் பேரவைக்குச் சென்று சபாநாயகர் அப்பாவுவிடம் தனது ராஜினாமா கடிதத்தை வழங்கினார்.

பின்னர் சென்னை அண்ணா அறிவாலயத்துக்குச் சென்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தி.மு.க.வில் தன்னை இணைத்துக் கொண்டார்.

**4 முறை எம்.எல்.ஏ.,** வைத்திலிங்கம் 4 முறை ஒரத்தநாடு எம்.எல்.ஏ.,வாக இருந்தவர். அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சராகவும் இருந்துள்ளார். அ.தி.மு.க. உட்கட்சி பூசலின் விளைவாக பன்னீர்செல்வம் ஆரம்பித்த அ.தி.மு.க. தொண்டர் உரிமை மீட்புக் குழுவில் வைத்திலிங்கம் இருந்தார். ஓபிஎஸ்ஸின் தீவிர ஆதரவாளராகவே அவர் பார்க்கப்பட்டவர்.

இந்நிலையில் கட்சித் தாவல் தடை சட்டத்தின்படி எம்.எல்.ஏ.,வாக இருப்பவர் இன்னொரு கட்சியில் சேரக்கூடாது என்பதால் ஒரத்தநாடு எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்துவிட்டு அவர் தி.மு.க.வில் இணைந்துள்ளார்.

அவரது ஆதரவாளர்கள் மனோஜ் பாண்டியன் ஆலங்குளம் எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்துவிட்டு தி.மு.க.வில் இணைந்தார், அதேபோல் மருது அழகுராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., சுப்புரத்தினம் ஆகியோரும் தி.மு.க.வில் இணைந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.

**தி.மு.க.வில் இணைந்தது ஏன்?** தி.மு.க. வில் இணைந்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த வைத்திலிங்கம், “எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. செயல்பாடுகள் உகந்ததாக இல்லை. அ.தி.மு.க. சுதந்திரமாக செயல்படவில்லை. சர்வாதிகாரமாக செயல்படுகிறது.

அ.தி.மு.க.வில் சேருமாறு தனிப்பட்ட முறையில் எனக்கு அழைப்பு வந்தது. நான் அங்கு தனியாக இணைய விரும்பவில்லை. பிரிந்தவர்கள் ஒன்றாக சேர வேண்டும் என்ற நோக்கில் நான் அ.தி.மு.க.வுக்குச் செல்லவில்லை.

அதேபோல், கூட்டணி தொடர்பான முடிவில் ஓ.பன்னீர்செல்வம் தாமதம் செய்ததால் தி.மு.க.வில் இணைந்துள்ளேன்.

ஆனால், தமிழக முதல்வர் ஸ்டாலினை மக்கள் போற்றுகிறார்கள். எல்லாருடைய தேவைகளையும் பூர்த்தி செய்து மக்கள் மனதில் உள்ளார் மு.க.ஸ்டாலின். அதனால் அண்ணா தொடங்கிய தாய் கழகத்தில் இணைந்துள்ளேன்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

## புதுக்கோட்டையில் மன்னர் இராஜகோபால தொண்டைமான் நினைவு மணிமண்டபம் !

### கட்டுமானப் பணியினை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

புதுக்கோட்டை, ஜன.22–

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாக தென்கிழக்கு மூலையில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும், புதுக்கோட்டை மன்னர் இராஜகோபால தொண்டைமான் அவர்களின் அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபத்தின் கட்டுமானப் பணியினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 18.01.2026 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

முதலமைச்சர் அவர்களால் புதுக்கோட்டை மாவட்டம், மன்னர் இராஜகோபால தொண்டைமான் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் நினைவு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று 22.06.2022 அன்று அறிவித்தார்கள். அந்த வகையில், புதுக்கோட்டை மன்னர் இராஜகோபால தொண்டைமான் அவர்களின் அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபத்தின் கட்டுமானப் பணி ரூ.3,02,15,536 மதிப்பீட்டில் 760.50 சதுர மீட்டரில் நடைபெற்று வருவதை நேரில் பார்வை யிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இப்பணியானது 26.02.2025 அன்று தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மன்னர் இராஜகோபால தொண்டைமான் அவர்களின் நினைவு மணிமண்டப ஜன்னல் மேல்மட்ட கம்பி கட்டும் பணி நடைபெற்று வருவதை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார் கள்.

புதுக்கோட்டை மன்னர் இராஜகோபால தொண்டைமான் அவர்களின் அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபமானது, மன்னர் இராஜகோபால தொண்டைமான் அவர்கள் பயன்படுத்திய பொருட்களை வைப்பதற்கான கண்ணாடி கதவுகள் பொருத்திய காட்சியகம், 530 நபர்கள் அமருவதற்கான கூட்ட அரங்கம், முக்கிய விருந்தினர் மற்றும் அரங்கில் கலந்துகொள்பவர்கள் பயன்படுத்துவதற்கான ஓய்விடங்கள் ஆகிய சிறப்பு அம்சங்களுடன் கட்டப்பட்டு வருகிறது.

மேலும், இப்பணியினை தொடர்புடைய அரசு அலுவலர்கள் தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பின்னர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் புதுக்கோட்டை அருங்காட்சியகத்தின் செயல்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின்போது, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை),

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எஸ்.திருமால், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் க.பிரேமலதா, உதவி செயற்பொறியாளர் கணேஷன், உதவிப் பொறியாளர் ரமேஷ்குமார், புதுக்கோட்டை அருங்காட்சியக காப்பாட்சியர் ஸ்ரீராம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கவிச்சுடர் கவிதைப் பித்தன், கார்த்திக் தொண்டைமான், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன் மற்றும் கே.ஆர்.என்.போஸ், கே.எஸ்.சந்திரன், ராமச்சந்திரன், பூங்குடிசிவா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.